CIVICUS | MONITOR
TRACKING CIVIC SPACE

**19 September 2025**

# இலங்கையில் ஒரு வருட காலமாக தொடர்ந்து வருகின்ற குடிசார் மற்றும் அரசியல் உரிமை மீறல்களும் சீர்திருத்தங்களின் பற்றாக்குறையும்

உலகளாவிய சிவில் சமூக கூட்டணியான CIVICUS ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடம், தொடர்ந்து வருகின்ற, மனித உரிமை பாதுகாப்பாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்களையும், போராட்டங்கள் மீதான அடக்குமுறைகளையும் நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. ஆட்சி பொறுப்பேற்று ஒரு வருடமாகிய நிலையில், மக்கள் மீது அடக்குமுறைகளை திணிக்கும் சட்டங்களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் தவறியதுடன், கடந்த காலத்தில் நடந்த குற்றச்செயல்களுக்கான பொறுப்புக்கூறல்களை வழங்கும் நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இன்று வெளியிடப்பட்ட CIVICUS Monitor அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சில நடவடிக்கைகள், சர்வதேச குடிசார் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் (ICCPR) கீழ் இலங்கையின் மனித உரிமைப் பொறுப்புகளுக்கு முரணானதாகவுள்ளது. ICCPR உடன்படிக்கையானது சங்கங்களில் சேருவதற்கான சுதந்திரம், கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம், அமைதியான முறையில் போராட்டங்களை நடத்துவதற்கான சுதந்திரம் உள்ளிட்ட மனித சுதந்திரங்களை மதிக்கவும் பாதுகாக்கவும் நிபந்தனைகளை விதித்துள்ளது. இச் சுதந்திரங்கள் இலங்கை அரசியலமைப்பிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை மக்களின் குடியுரிமை மற்றும் அரசியல் சுதந்திரத்தின் நிலையை "அடைக்கப்பட்ட" நிலை என CIVICUS Monitor மதிப்பீடு செய்துள்ளது. கடந்த ஓராண்டு காலமாக, சிவில் நிர்வாக செயல்பாடுகளின் இராணுவமயமாக்குதல் காரணமாக, சிவில் சமூக அமைப்புக்களைப் (CSOs) பதிவு செய்வதற்கான மற்றும் செயல்படுவதற்கான விதிமுறைகள் அதிகமாக்கப்பட்டதுடன், அதிகாரத்துவத்தின் தலையீடும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக CIVICUS Monitor ஆவணப்படுத்தியுள்ளது. மேலும் சிவில் சமூக அமைப்புகளை, குறிப்பாக உள்நாட்டு போர் நடைபெற்ற வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உளவுத்துறை (Intelligence surveillance) நெருக்கமாக கண்காணித்து வருகின்றது.

மனித உரிமை பாதுகாப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் மற்றும் தொந்தரவுகளை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும், அரசாங்கம் குறித்து விமர்சனங்களை தெரிவிக்கும் பத்திரிகையாளர்கள்,

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் உள்ளவர்கள், காவல்த்துறையினரதும் இராணுவத்தினரினதும் தொடர்ச்சியான கண்காணிப்பிற்கும், அச்சுறுத்தல்களுக்கும், தொந்தரவுகளுக்கும் உள்ளாகின்றனர். மேற்குறிப்பிட்ட பகுதிகளில் போராட்டங்கள் முன்னெடுப்பதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதோடு, போராட்டகாரர்களும் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஓராண்டு காலமாக, திஸாநாயக்கே அரசாங்கமானது, சிவில் சமூகத்திற்கு இடையூறுகள் வழங்குதல், மனித உரிமை சார்பாக வாதிடுவோருக்கு தொந்தரவு செய்தல், ஊடகங்களில் அரசாங்கத்தை விமர்சித்து வரும் விமர்சனக் கருத்துக்களை மௌனமாக்குதல் போன்ற பிரச்சனை மிகுந்த, அடக்குமுறையான ஆட்சிமுறையொன்றை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறான மனித குடியுரிமை மீதான அடக்குமுறைகள் நிறுத்தப்பவதற்கும், செயற்பாட்டர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், பத்திரிகையாளர்கள் எதுவித பயங்களோ, இடையூறுகளோ, பழிவாங்குதல்களோ இன்றி சுதந்திரமாக செயல்படவும், அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டுமென்றும் CIVICUS அமைப்பின், ஆசிய வலயத்திற்கான ஆய்வாளர், ஜோசப் பெனடிக்ட் (Josef Benedict) கூறியுள்ளார்.

மேலும், சர்வதேச சட்டங்களின் தரத்திற்கேற்ப, அரசியலமைப்பில் தற்போது நடைமுறையில் உள்ள அடக்குமுறையான சட்டங்களை சீர்திருத்துவதற்கும், ரத்து செய்வதற்கும் தற்போதைய அரசாங்கம் தவறியுள்ளமை குறித்து CIVICUS அதிருப்தி தெரிவித்துள்ளது. உள்நாட்டு போரின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட கொடூரமான சட்டமான, தீவிரவாத தடுப்புச் சட்டத்தை, (PTA) ரத்து செய்வதாக, ஜனாதிபதி தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை வழங்கிய போதும், அதற்கு மாறாக, தற்போதும் அச் சட்டமானது, ஆதாரங்களின்றி அரசாங்கத்திற்கு எதிரானவர்கள் எனக் கருதுபவர்களையும், சிறுபான்மையினக் குழுக்களையும் குறிவைக்கப் பயன்படுத்தப்படுகின்றது. அத்தோடு, மனித உரிமைக் குழுக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதும், சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு முரணாக உள்ளதுமான, நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டமானது (Online Safety Act) இன்னமும் அமுலில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சட்டங்களை நடைமுறையில் வைத்திருக்கும் திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் செயல்பாடுகள், ஜனாதிபதி தேர்தலின் போது, தேசிய மக்கள் சக்தி கூட்டணியால் (NPP), அவ்வாறான சட்டங்களை முழுமையாக ரத்து செய்வதாக வழங்கப்பட்ட வாக்குறுதிகளுடன் முரணாகவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பிற மனித உரிமை அமைப்புகளினால் சேகரிக்கப்பட்ட பெருமளவான ஆதாரங்கள் இருந்த போதிலும், யுத்த காலத்தின் போது நிகழ்த்தப்பட்ட குற்றச் செயல்களுக்குச் சரியான தீர்வை வழங்குவதற்கும் முறையான பொறுப்புக்கூறலை வழங்குவதற்கும் திஸாநாயக்கே அரசாங்கம் தவறியுள்ளனர். இதற்கிடையில், தமக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகளுக்கான

நீதியையும், பொறுப்புக்கூறல்களையும் கோரி நிற்கின்ற, தமிழ் செயற்பாட்டாளர்களும் பாதிக்கப்பட்ட சமூகங்களும் தொடர்ந்து அடக்குமுறைகளுக்கும் ஏனைய அத்துமீறல்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

“நடைமுறையில் உள்ள சட்டங்கள் அனைத்தும், ICCPR ன் கீழுள்ள குடிமக்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் சட்டங்களுடனான, அரசாங்கத்தின் இணக்கப்பாட்டிற்கேற்ப இருப்பதை உறுதிசெய்வதற்காக, அதிகாரிகள், சட்டங்களை சீர்திருத்தம் அல்லது ரத்து செய்ய வேண்டும். அத்துடன், யுத்த காலத்தில் நிகழ்த்தப்பட்ட குற்றச் செயல்களுக்கான முறையான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதுடன், அதற்காக போராடுகின்ற மனித உரிமை பாதுகாப்பாளர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்கள் மீது நிகழ்த்தப்படும் அனைத்து விதமான அடக்குமுறைகளையும் உடனடியாக நிறுத்துமாறும் அனைத்து பிரிவுகளுக்கும் உத்தரவிடவேண்டும்” என பெனடிக்ட் மேலும் கூறுகிறார்.

**CIVICUS Monitor** என்றால் என்ன?

அனைத்து கண்டங்களிலும், மக்களின் குடிசார் மற்றும் அரசியல் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு தளத்தை வழங்குவதற்கென இருபதிற்கு மேற்பட்ட அமைப்புகள் இணைந்து CIVICUS Monitor ஊடாக செயல்படுகின்றன. கூட்டங்களில் சேர்வதற்கான சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்று கூடல்களை மேற்கொள்ளும் சுதந்திரம், கருத்து தெரிவிப்பதற்கான சுதந்திரம் போன்றவை தொடர்பான தரவு மூலங்களை இணைக்கும் முறையை அடிப்படையாகக் கொண்டு, 198 நாடுகளும் பிராந்தியங்களும் ‘திறந்த’, ‘குறுகிய’, ‘தடைசெய்யப்பட்ட’, ‘அடக்கப்பட்ட’ அல்லது ‘மூடிய’ என வகைப்படுத்தப்படுகின்றது.

CIVICUS Monitor இனால், இலங்கையின் குடியுரிமை மற்றும் அரசியல் சுதந்திரம், ‘**அடக்கப்பட்டதாக**’ வகைப்படுத்தப்பட்டுள்ளது.